துணை இயக்குநர் (மு.கூ.பொ) சத்தியமங்கலம் புலிகள் காப்பகம், சத்தியமங்கலம் வனக்கோட்டம்
அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர்: திரு. கு. சுதாகர், இ.வ.ப.,

செ.மு.ஆ.எண்.9104/2022/ப1 நாள்: 20.09.2023

ப.ஆ.எண். 115/2023

பொருள் : பணியமைப்பு – கருணை அடிப்படையில் பணி நியமனம் – காலஞ்சென்ற திரு.எஸ்.ரவீந்திரன், வனவரின் வாரிசான திருமதி.ர. நந்தினி என்பவருக்கு இளநிலை உதவியாளர் பணி வழங்கப்பட்டது – பணியினை வரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்.18 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை (க்யூ-1) நாள்:23.01.2020.
2. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத்தலைவர்) சென்னை, க.எண்.ண2/27880/2022 நாள்.21.10.2022
3. தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர், சத்தியமங்கலம் புலிகள் காப்பகம், ஈரோடு ந.க.எண்.ப1/9896/2022 (ப.ஆ.எண்.ப1/96/2022) நாள்.26.10.2022
4. துணை இயக்குநர், சத்தியமங்கலம் வனக்கோட்டம் ந.க.எண்.9104/2022/ப1(ப.ஆ எண்.118/2022/ப1 நாள்.23.12.2022
5. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்(க்யூ.1)துறை நாள்.08.03.2023
6. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத்தலைவர்) சென்னை, ந.எண்.ண2/19226/2022 நாள்.12.06.2023
7. வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர், சத்தியமங்கலம் புலிகள் காப்பகம், ஈரோடு ந.க.எண்.ப1/5192/2023 நாள்.30.06.2023.
8. உதவி இயக்குநர், அரசுத் தேர்வுகள், உதவி இயக்குநர் அலுவலகம், ஈரோடு, ஒ.மு.எண்.002405/உ.இ/23, நாள்:03.02.2023
9. காவல் கண்காணிப்பாளர், ஈரோடு மாவட்டம், ந.க.எண்.கே4/E-4009636/11/2023, நாள்:15.03.2023.

ஆணை :

பார்வை-2ல் காணும் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்தறைத்தலைவர்), சென்னை அவர்களின் கடிதத்தின்படி, சத்தியமங்கலம் புலிகள் காப்பகம், ஈரோடு மண்டலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட காலஞ்சென்ற திரு.எஸ். ரவீந்திரன் வனவரின் வாரிசான திருமதி. ர. நந்தினி என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யும் பொருட்டு பார்வை-3ல் காணும் கடிதத்தின்படி சத்தியமங்கலம் வனக்கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டார். இதனை தொடர்ந்து, பார்வை-4ல் காணும் இவ்வலுவலக ஆணையின்படி, தனியர் 28.12.2022 முற்பகல் சத்தியமங்கலம் வனக்கோட்டத்தில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து நாளதுவரை பணிபுரிந்துவருகிறார்.

2) திருமதி. ர. நந்தினி, இளநிலை உதவியாளர் பணி வரன்முறை செய்திட ஏதுவாக பார்வை-8ல் காணும் கடிதத்தின்படி, தனியரது 10ஆம் மற்றும் 12ஆம் வகுப்புகளின் கல்விச்சான்றிதழ்கள் மெய்த்தன்மை உடையது என சான்றளிக்கப்பட்டுள்ளது. மேலும் பார்வை 9-ல் காணும் கடிதத்தின்படி, தனியர் மீது எவ்வித குற்ற வழக்குகள் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) எனவே, பார்வை-1ல் காணும் அரசாணையின்படி, கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறும் பணியாளர்களது பணியினை வரன்முறை செய்திட தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினை பெறும் நடைமுறை விட்டொழிக்கப்பட்டுள்ளது. மேலும், பார்வை-5ல் காணும் தமிழ்நாடு குடிமைப்பணி விதி 2023 (கருணை அடிப்படையிலான பணி நியமனம்) பற்றிய அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்(க்யூ.1)துறை நாள்.08.03.2023-ன் இணைப்பு 16-ல் Regularization of appointments - Each appointing authority shall regularize the services of the person appointed under these rules within a period of one year from the date of his joining service, subject to eligibility என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பார்வை-6 மற்றும் 7-ல் காணும் கடிதங்களில் அறிவுத்தியபடி, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு நாளதுவரை பணி வரன்முறை செய்யப்படாமல் உள்ள நபர்களுக்கு விதித்தளர்வுகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நியமன அலுவலர் நிலையில் தனியர்களது பணியினை அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறைப்படுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) எனவே, மேற்காண் அரசாணைகள் மற்றும் கடிதங்களின்படி, தற்காலிக பணி நியமனம் பெற்ற திருமதி.ர. நந்தினி, இளநிலை உதவியாளரின் பணியானது, தனியர் பணியில் சேர்ந்த நாளான 28.12.2022 முற்பகல் முதல் முன்தேதியிட்டு வரன்முறை செய்து மூன்றாண்டு காலம் தொடர் பணிக்குட்பட்டு இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் அமர்த்தி இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

20/9/23

துணை இயக்குநர் (மு.கூ.பொ)
சத்தியமங்கலம் வனக்கோட்டம்

20/9/23 20/9/2023

பெறுநர்

திருமதி. ர. நந்தினி, இளநிலை உதவியாளர்
துணை இயக்குநர் அலுவலகம், சத்தியமங்கலம் வனக்கோட்டம். (நேரில்)

நகல்: ப.ஆ.இருப்புக் கோப்பு-2023

நகல்: பணிப்பதிவேடு